| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறு | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடங்கிய செயற்பாட்டு இலக்கம் | பாடநூலில் உள்ள பாடத்தின் இலக்கமும் பெயரும் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| **தரம் 10, இரண்டாம் தவணைக்கு தெரிவுசெய்யப்பட்ட கற்றல் பேறுகளும் பாடங்களும்** | | | | | | |
| இரசனைக்காகவும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையிலும் வாசிப்பர். | படைப்புக்களை வாசிப்பதனூடாக ஆக்கத்திறனை மேம்படுத்திக் கொள்வார். | அணி பற்றி அறிந்து கூறுவார்.<br>உவமை அணியின் கூறுகளான உவமானம், உவமேயம்,பொதுத்தன்மை, உருபு என்பனவற்றை இனங்கண்டு கூறுவார் / விளக்குவார்.<br>உருவக அணியை இனங்கண்டு விளக்குவார்.<br>உவமை அணி, உருவக அணி ஆகியவற்றை வரைவிலக்கணப்படுத்தி வேறுபாட்டினை விளக்குவார். | அணிகளை அறிதல்<br>உவமை<br>உருவகம் | 7.1 | 9<br>மூன்று சொல்லோவியங்கள் | 02 |
| சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | சொற்றொடர்களின் வகைகளையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | உவமைத் தொடரின் முக்கியத்துவத்தை அறிந்து துலங்குவார்.<br>உவமைத் தொடரின் பொருளை அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | உவமைத் தொடர்கள் | 12.2 | பொது | 02 |
| கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | மௌனமாக வாசித்துக் கிரகித்து துலங்குவார். | அழைப்பிதழ் பல்வேறு வகைப்படும் என்பதனைக் கூறுவார்.<br>அழைப்பிதழின் தேவையையும் அனுப்பப்படும் சந்தர்ப்பத்தையும் விளக்குவார்.<br>அழைப்பிதழில் அமையவேண்டிய உறுப்புக்களைப் பட்டியல்படுத்தி எழுதுவார். | அழைப்பிதழ் | 6.2 | 5<br>நேசம் மறவா நெஞ்சம் | 02 |
| பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கு மேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்து துலங்குவார். | பாடலை /செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார் | பாடல்களைப் பதம் பிரித்துச் சொல்லுவார்.<br>பாடல்களைக் கொண்டு கூட்டிப்பொருள் விளங்க ஓதுவார்.<br>பாடல்களில் வரும் அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.<br>பாடலின் பொருளை தமது சொந்த மொழிநடையில் எழுதுவார்.<br>பாடல்களில் இடம்பெற்றுள்ள அணிகளை இனங்கண்டு துலங்குவார். | தனிப்பாடல்கள்<br>பங்கப் பழனத் துழு முழவர்…<br><br>ஓர் தட்டிலே பொன்னும் | 1.2 | 04<br>தனிப்பாடல்கள் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | சொற்தொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | அணி பற்றி அறிந்து கூறுவார். இலக்கியங்களிலுள்ள அணிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார். தற்குறிப்பேற்ற அணி சிலேடை அணி என்பனவற்றை விளக்கி எழுதுவார். | அணிகளை அறிதல் தற்குறிப்பேற்ற அணி சிலேடை அணி | 12.2 | 9 மூன்றுசொல்லோவியங்கள் | 02 |
| சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | சொற்தொடர்களின் இயல்பையும் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். | அணிகளின் வரைவிலக்கணத்தினை மீட்டுக் கூறுவார். இலக்கியங்களிலுள்ள அணிகளை இனங்கண்டு வகைப்படுத்துவார். உயர் நவிற்சி அணி இயல்பு நவிற்சி அணி என்பனவற்றை விளக்கி எழுதுவார். | உயர் நவிற்சி அணி இயல்பு நவிற்சி அணி | 12.2 | 9 மூன்று சொல் லோவியங்கள் | 02 |
| வாசித்து கிரகித்தவற்றை தெளிவாக எழுதுவார் | வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | உரைநடைப்பகுதியை வாசித்துக் கிரகித்துப் பிரதான கருத்துக்களைத் தெரிந்து எடுப்பார். வாசித்துக் கிரகித்த பகுதியில் தலைமைக் கருத்து, துணைக்கருத்துக்களை இனங்கண்டு குறித்துக் கொள்வார். ஒழுங்குபடுத்தப்பட்ட கருத்துக்களைப் பந்தியாக பொருத்தமான குறியீடுகளை இட்டு சொந்த மொழிநடையில் சுருக்கமாக எழுதுவர். மூலபந்தியைச் சுருக்கப் பந்தியுடன் ஒப்பிட்டு படிப்பார். | சுருக்கம் எழுதுதல் | 9.1 | 2 இருபதாம் நூற்றாண்டு கவிதை | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். | சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | சொற்களின் பொருளை அறிந்து துலங்குவார்.<br>சொற்களை பல்வேறு விதங்களில் வகைப்படுத்துவதற்கு அறிந்து கொள்வர்.<br>சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார். | சொற்களின் வகை | 13.2 | 05<br>நேசம் மறவா நெஞ்சம் | 02 |
| மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். | .சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | சொற்களின் வகையை அறிந்து கூறுவார்.<br>பெயர்ச் சொற்களின் தனித்துவமான பண்பினைக் கூறுவார்.<br>மாற்றுப்பெயர் பற்றி அறிந்து கூறுவார்.<br>ஆக்கப்பெயர் பற்றி அறிந்து கூறுவார்.<br>கூட்டுப்பெயர் பற்றி அறிந்து கூறுவார்.<br>தொழிற்பெயர் பற்றி அறிந்து கூறுவார்.<br>வினையாலணையும் பெயர் பற்றி அறிந்து கூறுவார். | பெயர்ச்சொல் | 13.2 | 04<br>புலவர் போற்றும் புரவலன் | 02 |
| பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். | பாத்திரங்களின் இயல்புக்கேற்ப நடித்துப் பேசுவார். | குற்றாலக்குறவஞ்சி என்னும் இலக்கியம் பற்றி அறிந்து கூறுவார்.<br>செய்யுளைச் சந்தி பிரித்து வாசிப்பார்<br>செய்யுளைக் கொண்டு கூட்டிப் வாசிப்பார்.<br>அரும்பதங்களுக்குப் பொருள் கூறுவார்.<br>செய்யுளில் காணப்படும் சிறப்புக்களை எழுதுவார்.<br>செய்யுளில் காணப்படும் அணிகளை இனங்கண்டு எழுதுவார். | குற்றாலக் குறவஞ்சி | 3.1 | 05<br>நேசம் மறவா நெஞ்சம் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | பதம் என்றால் என்னவென்று கூறுவார்.<br>பகுபதம்,பகாப்பதம் என்பன பற்றி விளக்கங் கூறுவார்.<br>பகுபத உறுப்புக்கள் பற்றி விளக்குவார். | பகுபதம்<br>பகாப்பதம் | 13.2 | 03<br>மச்சாள் | 02 |
| படைப்புக்களை வாசித்து அனுபவங்களின் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | அறிக்கை எழுதவேண்டிய சந்தர்ப்பங்களை இனங்கண்டு கூறுவார்.<br>அறிக்கையில் இடம்பெறவேண்டியஅம்சங்களை எடுத்துக் கூறுவார்.<br>அறிக்கைச் சட்டகத்தை தயாரிப்பார். | அறிக்கை எழுதுதல் | 11.2 | 08<br>நாட்டார் பாடல் | 02 |
| மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். | .சொற்களின் வகையை அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். | இடைச்சொல் பற்றிய விளக்கத்தை அறிந்து கூறுவார்.<br>இடைச்சொல்லின் வகையை அறிந்து கூறுவார்.<br>உம், ஓ, ஏ, தான் என்னும் இடைச் சொற்கள் பயன்படுத்தும் முறையினை அறிந்து கூறுவர். | இடைச்சொல் | 13.2 | 04<br>புலவர் போற்றும் புரவலன் | 01 |
| எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார். | வழுவின்றி வாக்கிய அமைதியோடு எழுதுவார். | வாக்கியங்களின் இயைபு பற்றி அறிந்து துலங்குவார்<br>எழுவாய்,பயநிலை இயல்பினை அறிந்து பிரயோகிப்பார். | சொற்றொடர்வகை | 10.1 | பொது | 01 |
| இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலும் வாசிப்பார். | படைப்புக்களை வாசித்து நயப்பார். | சிறுகதையில் அமையவேண்டிய அம்சங்களை அறிந்து கூறுவார்.<br>கம்பியூட்டர் என்ற சிறுகதையின் கருவைப் பற்றி விவரிப்பர்.<br>இக்கதையில் இடம்பெறும் பாத்திரங்களின் குணவியல்பினை எழுதிக் காட்டுவார். | கம்ப்யூட்டர் | 7.1 | 06<br>கம்ப்யூட்டர் | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | சிறுகதையின் மொழிநடையை அறிந்து எழுதுவர். | | | | |
| பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கு மேற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்து துலங்குவார். | செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | நாட்டார் பாடலின் அமைப்பு, உள்ளடக்கம், பாடப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றி அறிந்து கூறுவார்.<br>பாடலின் பொருள் விளங்கத்தக்க வகையில் வாசிக்கும் திறனைப் பெறுவார்.<br>பாடல்களின் உள்ளடக்கம் பற்றி எடுத்துக் கூறுவார்.<br>பாடல்கள் பாடப்படும் சந்தர்ப்பங்கள் பற்றி விளக்கிக் கூறுவார். | நாட்டார் பாடல்கள் | 1.4 | 08<br><br>நாட்டார் பாடல்கள் | 02 |